# ஈஸ்டர் சூரிய உதயம்

---

# EASTER SUNRISE

## 56-0401 S

*(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)*

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்க:
சகோ. A. டேவிட் லாரன்ஸ்: +91 9488089819
website: www.thefinish.in

# ஈஸ்டர் சூரிய உதயம்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1956ம் வருடம், ஏப்ரல் மாதம், 1ம் தேதி பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், அமெரிக்காவில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவி லிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமை யாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப் படுகின்றது.

*வெளியிடப்பட்டது: மார்ச் 2017*

## ஏமது வெளியீடுகள்:

1. தேவதூதன்
2. ஓர் கலியாண விருந்து
3. பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை
4. கிறிஸ்துவின் ஊழியம்
5. விசுவாசமுள்ளவனாயிரு
6. சபை ஒழுங்கு
7. சிமியோன்
8. அவர் உங்களை விசாரிக்கிறவர்
9. தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்
10. வார்த்தையின் அதிகாரத்தில் இயேசு
11. எபிரெயர் அதிகாரம்–6, பாகம்– 2
12. ஆயத்தம்
13. மகத்தான யுத்தவீரனாகிய யோசுவா
14. கர்த்தரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரிசனம்
15. ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?
16. கிருபைக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை சபை தெரிந்து கொள்ளுதல்
17. ஈஸ்டர் சூரிய உதயம்
18. இராப்போஜனம் [1963]

# ஆயிரம் வருட அரசாட்சியில்



*சிங்கம் முதன்முதலாக சிருஷ்டிக்கப்பட்டபோது, அது மனிதனுடன் நட்பு கொண்டிருந்தது. ஆனால் பிசாசோ மனிதனுடன் அது பகையுணர்ச்சி கொள்ளச் செய்தான். அது உண்மை. ஆனால் ஆயிரம் வருட அரசாட்சியில் ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒன்றாக மேயும். சிங்கம் மாட்டைப் போல் புல்லைத் தின்று அதனுடன் படுத்துக்கொள்ளும். ஆயிரம் வருட அரசாட்சியின் போது அவை ஒன்றுக் கொன்று தீங்கிழைக்காது. பிசாசு அப்பொழுது போய் விட்டிருப்பான். இவன்தான் இந்த மிருகங்கள் மற்றவை களைப் பீறிக் கொன்றுத் தின்னும்படி செய்கிறான். ஆனால் சிங்கத்திலிருந்தவனிலும் அந்த தீர்க்கதரிசியாகிய தானியேலி லிருந்தவர் பெரியவர். பாருங்கள்? அந்த சிங்கத்திலிருந்த வனிலும் அந்த தீர்க்கதரிசியிலிருந்தவர் பெரியவர்.*

**உங்களிலிருக்கிறவர், நவம்பர் 10, 1963, பத்தி எண் 176**

# ஈஸ்டர் சூரிய உதயம்

# EASTER SUNRISE

## ஏப்ரல் 1, 1956

## பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

**56-0401 S**

**...** கண்ணீரோடு விதைக்கிறவர்கள், கெம்பீரத்தோடே எழும்பி வருவார்கள். ஆமென். ஓ, நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள். ஓ, என்னே, பழைய ஏற்பாட்டு பரிசுத்த வான்கள் அதைக் குறித்து எண்ணிப்பார்க்கக் கூடுமானால், 1900 வருடங்கள் உபத்திரவங்களையும், கடுமையான உழைப்பையும் மற்றவைகளையும் கண்ட பிறகு இந்தக் காலை வேளையில் நாம் அதை எவ்வளவு எண்ணிப் பார்க்க வேண்டும்; நாம் சரியாக உயிர்த்தெழுதலின் முன் வாசலுக்குள் இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். ஆமென். உயிர்த்தெழுதலானது எந்த நேர மும் சம்பவிக்க முடியும் என்ற அளவுக்கு சபையானது இப்பொழு துள்ள இந்த மணி நேரத்துக்கு சரியாக அசைக்கப்பட்டிருக்கிறது.

அந்த நாளில் அது விசுவாசிகளாகிய நமக்கு எவ்வளவு முக்கியமாதாக இருக்கும் என்பதை நான் எண்ணிப்பார்க்கிறேன், அந்த நாளில் எவ்வளவு முக்கியமாதாக இருக்கும்.

2. மார்த்தாளும் மரியாளும் அந்த கல்லறையண்டை போன அந்த அதிகாலை வேளையை என்னால் காண முடிகிறது ... ஒரு இரவுக்குப் பிறகு அந்த மலைப்பிரதேசத்தின் பக்கத்தி னூடாக அவர்கள் வந்து கொண்டிருந்தனர். அந்த ஏழைத் தாயாரின் இருதயத்தைக் குறித்து எண்ணிப்பாருங்கள். அவள் – அவளுடைய குழந்தை பிறந்த போது, ஆரம்பம் முதற்கொண்டு முடிவு வரையில், அது முறை தவறிப்பிறந்த பிள்ளை என்று அவர்கள் கூறினர், அது முற்றிலுமாக யோசேப்பை சேர்ந்ததல்ல, அது – அல்லது அது யோசேப்புடையதாக இருந்தது, அவர்கள்... அந்தக் குழந்தை பரிசுத்த விவாகத்திற்கு வெளியே பிறந்ததாகும். அவள் கடந்து செல்ல வேண்டிய எல்லாமும் அவளுக்கிருந்தது, உன்னுடைய குழந்தையைக் குறித்து எண்ணிப்பார், அது எவ்வள வாக புறக்கணிக்கப்பட்டும், ஜனங்களால் வெறுத்து ஒதுக்கப் பட்டும், துப்பப்பட்டும் இருந்தது, இருப்பினும் அவன் அதை உரிமைகோரினான். அதோ அங்கே சிலுவையில் அறையப்பட்ட அந்த மகத்தான மணி நேரத்தில் அவரைக் கண்டு, அவள் எப்படியேனும் தன்னுடைய நடுக்கமான இருதயத்தோடு, “தேவன் அந்த குழந்தையை எனக்குக் கொடுத்தார், இது எப்படி சம்பவிக்க முடியும்?” என்று கூறினாள்.

அவர்கள் அவருடைய தலையில் முள்முடியை வைக்கும் படியாக சென்று, அவருடைய முதுகின் வழியாக இரத்தம் வெளியேறும் அளவுக்கு அவரை அடித்து, அவருடைய சரீரத்தின் மேற்பகுதியிலும் கீழ்பகுதியிலும் தழும்புண்டாக்கி இந்தக் காரியங் களை எல்லாம் செய்த சமயத்தில் அவள் நிச்சயமாக அவ்வாறு எண்ணினாள்; அவர் எந்த நேரத்திலும் அந்த சிலுவையைக் கீழே எறிந்து விட்டு, திரும்பி தம்முடைய கால்களை தரையில் மிதித்து (நின்று) விடுவார் என்றும், பூமியானது ஒரு பக்கம் முதல் மறு பக்கம் மட்டுமாக அதிர்ந்து பூமியதிர்ச்சி ஏற்பட்டு விடும் என்றும்,



இல்லையென்றால், வேறு எங்கிருந்து அது வந்திருக்கும்? உன்னுடைய கால்சியம், பொட்டாஷ், பிரபஞ்ச வெளிச்சம், இங்கே பூமியின் மேலாக இருக்கும் உன்னுடைய ஜீவன்... இவையெல்லாவற்றையும் கொண்டு தேவன் உன்னை ஒன்று சேர்த்தார். அதை வேறுயாராலும் செய்ய முடியாது. பொட்டாஷ், கால்சியம், இவையெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து உங்களால் மனிதனை உண்டாக்க முடியாது. அவன் இன்றைக்கு என்னனவாயிருக்கிறானோ அவ்வித மாய் அவனை உண்டாக்குவதற்கு தேவ ஆவியினுடைய ஜீவன் அதற்கு அவசியமாயிருக்கிறது.

### ஏன் சில ஜனங்களால் வெற்றியை காத்துக் கொள்ள முடியவில்லை?, 24–3–1957

உம் வருகைக்கு முன்பு நான் நித்திரையடைந்தால், அந்நாளில் நான் நிச்சயம் உயிரோடெழுவேன்.

ஆறாம் முத்திரை, மார்ச் 23, 1963 மாலை

★★★★★

சுற்றிலும் ஒரு சரீரம் உருவாகும், சாராளுக்கு நேர்ந்தது போல.

250. அதற்கு முன்பு... அவள் பெற்றிருந்த அந்த பழைய சரீரம், அந்த முதல் சரீரம், ஒரு குமாரனைப் பெறுவதற்காக மாற வேண்டியதாயிருந்தது. உங்களுக்கு விளங்குகிறதா? அந்த சரீரத்தினால் அதை செய்ய முடியவில்லை. அது போன்று நம்முடைய இந்த சரீரமும் அதை செய்ய முடியாது. குமாரனைப் பெற்றுக் கொள்ள இதுவும் அதே விதமாக மாற வேண்டும்.

### கேள்விகளும், பதில்களும், COD 2:21, ஆகஸ்டு 30, 1964, காலை

79. எனவே, கவனியுங்கள். நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். உன்னை பூமியிலிருந்து வெளியே கொண்டு வரும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் அடை காத்து, நீயும் பூமியிலிருந்து வெளியே வந்து, இப்பொழுது இங்கே ஒரு புத்திசாலியான நபராய் இருக்கிறாய்; எனவே எந்த ஒரு தெரிந்தெடுக்கும் வாய்ப்பும் உனக்கு இல்லா திருக்கும்போது, இன்றைக்கு நீ என்னவாக இருக்கிறாயோ அவ்விதமாக பரிசுத்த ஆவியானவர் உன்னை உணடாக்கி இருப்பாரானால், முதன்முதலில் பூமியிலிருந்து உன்னை கொண்டு வந்த அவர், உன்னுடைய சரீரம் கிழக்கு தொடங்கி மேற்கு வரை சிதறடிக்கப்பட்டிருந்தாலும் கடைசி நாட்களில் உன்னை உயிரோடு எழுப்புவது எவ்வளவு நிச்சயம்.

நினைவில் கொள்ளுங்கள், முதன்முதலில் பரிசுத்த ஆவியானவர் அடைகாக்க துவங்கியபோது, உங்களுடைய சரீரங்கள் இங்கே இருந்தன. அது இங்கே



அவர் யார் என்பதை வெளிப்படையாக பிரகடனப்படுத்துவார் என்றும் அவள் நிச்சயமாக எண்ணினாள். ஆனால் அவரோ பரிதாபமான தோல்வியுற்ற ஒரு குற்றவாளி சிலுவையில் தொங்குவதைப் போன்று அதோ அங்கே மரித்து விட்டிருந்தார்.

**3.** அவர் அவமானத்தோடு மரித்திருந்தார். அவரைச் சுற்றிலும் வஸ்திரத்தை அணிந்துள்ள விதமான காட்சியை தான் நிச்சயமாக நீங்கள் காண்கிறீர்கள், அது தவறாகும். அவர்கள் எல்லா வஸ்திரங்களையும் அவரை விட்டு உரிந்து போட்டனர், வெறுமனே... அவரை உலகத்திற்கு முன்பாக அவமானப்படுத்தி, அவர்களால் செய்ய முடிந்த யாவற்றையும் செய்து, அவர்கள் அவரை சிலுவையில் ஆணியடித்தனர். அவர் உதவியற்றவராய் நின்று கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. (சிலுவையில் அறையப் பட்டவராய்) நின்று கொண்டிருந்தார், உலகத்திற்கு அவரைப் பிடிக்கவில்லை, பரலோகமும் அவரைக் கொண்டிருக்க முடிய வில்லை, அவர் ஒரு பாவியாக இருந்தார். ஓ என்னே! நீங்கள் மாத்திரம் அதைத் தெளிவாக புரிந்து கொள்வீர்களானால், சற்று சிந்தித்துப் பாருங்கள், உலகமானது தன்னுடைய சிருஷ்டிகரை விரும்பவில்லை. பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை, ஏனெனில் அவர் தம்மேல் பூமியினுடைய பாவங்களைக் கொண்டிருந்தார். அவர்களுக்கு ஒரு இடம் கூட இருக்க வில்லை... பிறப்பதற்கு ஒரு இடத்தைக் குறித்து பேசுகிறீர்கள், மரிப்பதற்கும் இடமில்லாதிருந்தது. அது சரியே. உலகம் அவரை விரும்பவில்லை. அவர்கள் புறக்கணித்து, "அந்த மனிதனை அகற்றுங்கள்" என்றனர். பரலோகமும் அவரை ஏற்றுக் கொள்ள முடியவில்லை, ஏனெனில் அவர் ஏற்கனவே ஒரு பாவியாக இருந்தார்.

**4.** ஓ, எப்படிப்பட்ட ஒரு இரட்சகர்! மகிமையிலிருந்து வந்து எனக்காக அவர் இரட்சகரானார். இப்படியிருக்க அவருக்கு சொந்தமானவர்களால் அவர் புறக்கணிக்கப்பட்டார், "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." பிறக்கவும் இடமில்லை,

மரிக்கவும் இடமில்லை. உலகமானது எதை விரும்பினது? அவரை நரகத்திற்குள் தள்ளுவதைத் தவிர அவர்களால் என்ன செய்யக் கூடும். ஆனால் அவரை நேசித்த யாரோ ஒருவர் அங்கே இருந்தார். "அவருடைய ஆத்துமாவை நான் பாதாளத்தில் விடமாட்டேன், அவரை அழிவைக் காணவொட்டேன்." ஆனால் அவர் அவரை கல்லறையை விட்டு உயிரோடு எழுப்பினார், அவர் ஈஸ்டர் காலையில் ஜெயத்தோடு வெளியே வந்தார். அல்லேலூயா! ஒவ்வொரு கட்டுகளையும், ஒவ்வொரு பயத்தையும், மற்றும் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து, மீண்டும் உயிர்த்தெழுந்து இன்றும் என்றென்றுமாய் ஜீவிக்கிறார்.

அவருடைய சமூகம் இங்கேயுள்ளது, ஆராதனையின் இந்தக் காலை வேளையில் அவர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இரண்டு பேரோ மூன்று பேரோ ஒன்று கூடுகிற இடத்திலும் அவர் விஜயம் செய்கிறார். நான் எவ்வளவு சந்தோஷமான இருதயத்தைக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களோடு இருப்பேன்" என்று வேதாகமத்தில் அவர் பண்ணின அதே வாக்குத்தத்தங்களை நீங்கள் அறிவீர்கள். பரிதாபமானவர்களும், புறக்கணிக்கப்பட்டவர்களும், இந்த உலகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களும் இன்னுமாக நம்மோடு அவருடைய பிரசன்னத்தைக் கொண்டிருக்க முடியும். அவர் சர்வவல்லவரும், எப்போதும் எங்கும் நிறைந்திருக்கிறவரும், சகல பிரசன்னரும், சகல வல்லமை நிறைந்தவரும், எல்லா நேரமும் எல்லா இடங்களிலும் இருப்பவருமாக இருக்கிறார். ஒவ்வொரு ஆபத்து வேளையிலும் அவர் எப்படியாக தப்பித்துக் கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். "நான் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையாயிருக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

**5.** இப்பொழுது, இந்தக் காலையில் அவர் ஜீவிக்கிறார். அவர் இன்று நம்மோடு கூட இருக்கிறார், நாம் இன்று ஒருவேளை வெறுமனே ஒரு சிறு சபையாக இருக்கலாம். நாம்



178. அப்பொழுது நான், "ஆண்டவரே, ஒரு நாள் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள். இது நிகழக்காத்துக் கொண்டிருந்த முன்பிருந்த சபை காலங்களின் பரிசுத்தவான்கள் உயிரோடெழுந்து தங்கள் கல்லறைகளை விட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்துக்குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படும்" என்று எண்ணிக் கொண்டேன். எடுத்துக் கொள்ளப்படுதலானது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோகத்தை நோக்கிப் புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும் என்பதை சிந்தனை செய்து பாருங்கள். ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தங்கள் மார்புகளில் பூசப்பட்டதையும், அவர்கள் காலத்து செய்திக்காக உண்மையாக வாழ்ந்ததையும் பெருமையாக மற்றவர்களுக்குக் காண்பித்து அணிவகுத்து செல்வார்கள். சகோதரரே, வரப்போகும் அந்த எடுத்துக் கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கிறோம்..

## ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், டிசம்பர் 4, 1965

249. எனவே அது இங்கு மறைவாக உள்ளது. அது என்ன? உலக தோற்றத்துக்கு முன்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை. இது 'நெகடிவ்'வையே பிரதிபலிக்கிறது; ஆனால் அதுவோ 'பாஸிடிவ்'வை, வார்த்தையை பிரதிபலிக்கும். பாருங்கள்? அதே காரியம் தான் – மணவாட்டி மறுரூபப்படுதலும் அதே காரியமாகத்தான் இருக்கும். உங்களுக்குள் இருக்கும் அந்த வார்த்தையைச்

நான் பைத்தியக்காரத்தனமாக இப்பொழுது நடந்து கொள்கி றேன் என்று நினைக்கிறீர்களா? என்னை அங்கு கவனி யுங்கள், நாம் அங்கு அடையும்போது, எனக்கும் நம் அனைவருக்கும் அது மகத்தான தருணமாயிருக்கும்.

**யேகோவா – யீரே [முதலாம் பாகம்], ஜுலை 5, 1962**

64. எக்காளம் முழங்கினபோது, விடுதலையாக விரும்புகிறவர் அனைவரும் விடுதலையாகிச் செல்லலாம். அவர்கள் காதுகள் குத்தப்பட்டு முத்தரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

மிருகத்தின் முத்திரை என்பது இனிவரப்போகும் காலத்தில் சம்பவிக்க வேண்டிய ஒன்று என்று நாம் கூறுவோமானால், அது அப்பொழுது முழுவதும் வெளிப் படையாகும். ஆனால் அந்த நேரத்தில், நீங்கள் ஏற்கனவே அதை தரித்துக் கொண்டு விட்டீர்கள் என்பதை உணரு வீர்கள். பாருங்கள்? பரிசுத்த ஆவியும் அதேவிதமாகத் தான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையில் வரும் போது அது முழுவதும் வெளிப்படையாகும். அப்பொழுது மறுரூபமாக்கும் வல்லமையை நாம் உணர்ந்து, மரித்தோர் கல்லறையை விட்டு உயிரோடெழுவதை நாம் காண்போம். நாமும் கூட ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகி, அவரு டையதைப் போன்ற ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள் வோம். அப்பொழுது அது முழுவதும் வெளிப்படையாகும். அதைப் புறக்கணித்தவர் அனைவரும் அந்த நேரத்தில் கைவிடப்படுவார்கள்.

**உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜுன் 30, 1963**



ஒருவேளை வெறுமனே பலகைகளைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு பழைமையான சிறு கூடாரத்தை இங்கே கொண்டிருக்கலாம். காண்பதற்கு மிக அதிகமாக இல்லை; ஆனால் மிகத் தாழ்மை யான இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் அவர் ஒரு போதும் வருவதில்லை. ஜீவிக்கிறவர்கள் மத்தியில் இன்று அவர் ஜீவனோடிருக்கிறார். அவர் மரித்தவராயில்லை, அவர் ஜீவிக்கி றார். அவர் ஜீவனுள்ளவர்கள் மத்தியில் ஜீவிக்கிறார்.

இன்று பாவியான நண்பரே, நீ பாவத்திலும் அக்கிரமத் திலும் மரித்தவனாயிருந்தால், ஏன் பிழைக்கக் கூடாது? நீ ஏன் மரணத்தில் தரித்திருக்க வேண்டும்? ஏன்... மரணத்திலேயே தரித்திருப்பதால் உங்களுக்கு என்ன லாபமுண்டு? நீங்கள் ஏன் ஜீவனுக்குள் வரக்கூடாது? நீங்கள் ஏன் இன்று அவரோடு ஜீவிக் கக்கூடாது? இந்த மகத்தான ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை யோடே, உங்களுடைய அன்பார்ந்தவர்களிடமிருந்து பிரிக்கும் மரணம் கூட உங்களிடமிருந்து கறையையோ, மாசு மறுவையோ (mar) அல்லது உங்களிடமிருந்து எதையும் ஒருபோதும் எடுத்துச் செல்ல முடியாது. என்னவொரு ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை. அவருடைய உயிர்த்தெழுதலினிமித்தமாக நாம் இன்று கொண் டிருப்பது என்னவொரு அற்புதமான காரியமாக உள்ளது. அவர் ஜீவிக்கிறார், நாம் அவரோடு ஜீவிக்கிறோம், என்றோவொரு நாளில் அவர் வருவார், நாம் அவரோடு போவோம். "நான் அவர்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறேன் என்று போய் என்னுடைய சீஷர்களிடமும், பேதுருவிடமும் சொல்லுங்கள்" என்றார்.

அவர் எப்போதுமே ஒரு வழியை உண்டாக்கும்படி நமக்கு முன்னே போகிறார். எந்த வழியும் இல்லாத இடத்திலும் அவர், "நானே வழி. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொன்னார். இன்று ஒருவேளை – இங்கே இன்று நாம் கூடியிருக்கையில்... நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், இன்றும் கிறிஸ்து இயேசு ஜீவிக்கிறார்!*

*ஜீவியத்தின் இடுக்கமான பாதையினூடாக அவர் என்னோடு நடந்து வந்து பேசுகிறார்.*

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், இரட்சிப்பை அருளுகிறார்!*

*அவர் ஜீவிக்கிறார் என்று எனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம்;*

*அவர் என்னுடைய இருதயத்திற்குள் ஜீவிக்கிறார்.*

**6.** அது அற்புதம் அல்லவா? இந்தக் காலை வேளையில் எத்தனை பேருக்கு இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை உண்டு, உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா? நிச்சயமாக. அந்த நம்பிக்கை இல்லாமல், "போதகர் சகோதரனே, இந்தக் காலை வேளையில் இந்த சபையில் இருக்கும் நீர் நான் இந்த உயிர்த்தெழுதலின் காலையில் இங்கே உம்மோடு கூடியிருக்கிறேன், ஆனாலும் எனக்குள் அழிவில்லாத ஜீவன் இல்லை என்றும், இந்த நம்பிக்கை என்னுடைய மடிக்குள் இல்லை என்றும் நான் அறி வேன். இன்று நீங்கள் எல்லாரும் ஜெபத்திலே என்னை நினைவு கூர வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இது எனக்குள் உயிர்த்தெழுதலாய் இருக்க வேண்டும் என்றும், என்னுடைய ஆத் துமா இந்த அற்புதமான நம்பிக்கைக்குள் உயிர்த்தெழும் என்றும், என்றோவொரு நாளில் மரண நேரத்தின் தலையணையை அழுத்துவேன் என்றும், எங்கோவுள்ள கல்லறைத் தோட்டங்களி லுள்ள ஒரு கல்லறையிலோ அல்லது கடலிலோ, அடக்கம் பண்ணப்படத்தான் வேண்டும் என்றும், அல்லது அடக்கம் பண்ணப்படுவதற்கான என்னுடைய இடம் எங்கேயாகிலும் இருக் கலாம்; ஆனால் நான் அந்த நம்பிக்கையை கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் என்னுடைய கரத்தை



போம். உலகத்திலுள்ள மற்றவர்கள் அவர்களைக் காண மாட்டார்கள். அது எடுத்துக்கொள்ளப்பட்டு இரகசியமாக சென்று விடும். அதன்பிறகு அந்த நாளுக்காக காத்திருந்து, அந்த மகிமையான ஆயிரம் வருட அரசாட்சிக்கு அது பூமிக்குத் திரும்ப வரும், மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருடம் முடியுமளவும் உயிரடையவில்லை (வெளி. 20:5). அதன் பிறகு பொதுவான உயிர்தெழுதல் உண்டாகும்.

## நான் எப்படி ஜெயங்கொள்வது?, ஆகஸ்ட் 25, 1963, பத்தி எண் 61

12. இதை ஞாபகம் கொள்ளுங்கள். அவர் வருவதற்கு முன்பு நாம் மரித்துப் போனால், மற்றவர்கள் மறுரூபப் படுவதற்கு முன்பு நாம் உயிரோடெழுந்து அவருடைய பிரசன்னத்தில் இருப்போம். "கர்த்தருடைய எக்காளம் தொனிக்கும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகி, அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுக்கப்பட்டு கர்த்தரை சந்திப்போம்." உயிர்த்தெழுதலின் வரிசைக் கிரமத்தைப் பாருங்கள். நமக்கு அருமையானவர்களை நாம் காண ஆவல் கொண்டுள்ளோம் என்பதை தேவன் அறிவார். அவரை சந்திக்க நாம் முதலில் அங்கு செல்வோமானால், தாய் அல்லது தந்தை அல்லது மற்றவர்கள் அங்குள்ளனரா என்று நாம் சுற்று முற்றும் தேடிப் பார்ப்போம், எனவே பரிசுத்த ஆவியின் ஞானத்தைப் பாருங்கள். நாம் முதலில் ஒருவரையொருவர் சந்திக்கிறோம். அதன் பிறகு நாம் அங்கு சென்று "ஆச்சரியமான கிருபை" என்று பாடுகி றோம் – அங்கு ஆராதனைக்கான நேரம் வரும்போது.

அறிந்து கொள்கிறோம், பாருங்கள். "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, ஒரு நிமிஷத்திலே, ஒரு கண் இமைப்பொழுதிலே (ஆங்கில வேதத்தில் உள்ளவாறே –தமிழாக்கியோன்) மறுரூபமாக்கப் பட்டு, அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்."

137. ஆகவே நான் நோவாவின் காலத்தில் மரித்திருந் தாலும், ஆபிரகாமின் காலத்தில் நான் மரித்திருந்தாலும், அப்போஸ்தலர் காலத்தில் நான் மரித்திருந்தாலும், இரண்டு வாரங்களுக்கு முன்னதாக நான் மரித்திருந்தாலும், அல்லது சரியாக இப்பொழுதே அது இருந்தாலும் என்ன வித்தியா சத்தை அது உண்டுபண்ணுகிறது? அது என்ன வித்தியா சத்தை உண்டாக்குகிறது? ஒரு நிமிஷத்திலே, ஒரு கண்ணி மைப் பொழுதிலே நான் அங்கே இருப்பேன், அந்த நேரம் வரைக்கும் நான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறேன்.

### கேள்விகளும் பதில்களும், COD 2:15, மே 27, 1962

இப்பொழுது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது, அவருடைய வருகையில் உண்மை யில் பிரியம் கொண்டவர்களும் (loving) அதற்கென்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் (living) அவர் ஆகா யத்தில் தோன்றும் போது, கிறிஸ்துவுக்குள் மரித்த சபை எழுந்திருந்து ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகும். மற்ற வர்கள் அதைக்குறித்து ஒன்றுமே அறியமாட்டார்கள். அவர்கள் நகரத்தில் அநேகருக்குக் காணப்பட்டார்கள் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள் (மத் 27:53). எடுத்துக் கொள்ளப்படுதலின் போதும் அவ்வாறே சம்பவிக்கும். நாம் ஒருவரையொருவர் காண்போம், அவர்களை நாம் காண்



உயர்த்தி, நீங்கள் எனக்காக ஜெபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றும் கூறி, அந்த நம்பிக்கை இல்லாமல் இருக்கிற ஒருவர் இங்கே உண்டா? அங்கே அப்படிப்பட்ட ஒரு நபர் உண்டா? ... இல்லாதிருக்கிறவர்கள் உங்களுடைய கரத்தை உயர்த்துவீர்களா? அப்படியானால் நீங்கள் எல்லாருமே கிறிஸ்தவர் கள் தான் என்று நான் யூகிக்கிறேன். அது அற்புதமானது. நாம்...

7. நான் இன்று விசுவாசிக்கிறேன் – மீண்டும் திரும்பி வந்த பிறகு, சர்வவல்லமையுள்ள தேவன் இன்று இங்கே இந்த மேடைக்கு கர்த்தராகிய இயேசுவை அனுப்பி, இயேசு ஜீவிக்கிறார் என்றும், இன்று ஜனங்கள் மத்தியில் இருக்கிறார் என்றும், ஒரு சந்தேகத்தின் நிழலுக்கு அப்பால் உங்களுக்கு நிரூபிப்பார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆமென். அவர் இங்கே இப்பொழுது இருக்கிறார் என்பதை நான் அறிவேன். ஆமென். அவர் இங்கே யிருக்கிறார். அவர் ஜீவிக்கிறார். நாம் அவரைக் காண்கிறோம். நாம்... அவர் தோமாவிடம், "என்னை ஒருபோதும் காணாதிருந் தும் விசுவாசிக்கிறவனுக்கு வரும் பலன் எவ்வளவு அதிகமா யிருக்கும்" என்றார். ஆமென். அவர் அற்புதமானவராயிருக்கிறார்.

8. இப்பொழுது நாம் இதைப் பாடுவோம். சகோதரி கெர்ட்டி, *அவர் ஜீவிக்கிறார்* என்ற பாடலுக்கான இசைத்தந்தியை எங்களுக்குத் தாருங்கள். இக்காலை வேளையில், அந்தப் பாடலை நான் கேட்க விரும்புகிறேன். ஓ, துக்கங்களையும், கஷ்டங்களையும் நாம் காண்கிறோம், கிரயம் என்னவாயிருந் தாலும், இப்பொழுது, அதெல்லாம் முடிந்து விட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லேலூயா. பகல் வெளிச்சம் வந்திருக்கிறது. நரகமானது (sheol) முடிந்து விட்டது. இனி மேலும் பாதாளம் கிடையாது. மரணத்தின் மேல் அதிகாரம் உண்டு. எல்லா அந்தகாரமும் மறைந்து விட்டது. நாம் ஜீவிக்கி றோம். ஆமென். நாம் ஜீவிக்கிறோம், அவரும் ஜீவிக்கிறார். அவர் ஜீவிக்கிறார், நாம் அவருக்குள் ஜீவிக்கிறோம். ஆமென். இப்பொழுது எல்லாரும் ஒன்றுசேர்ந்து (பாடுவோம்):

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், கிறிஸ்து இயேசு இன்றும் ஜீவிக்கிறார்!*

*ஜீவியத்தின் இடுக்கமான பதைகளினூடாக அவர் என்னோடு நடந்து கொண்டே பேசுகிறார்.*

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், இரட்சிப்பை அருளுகிறார்!*

*எனக்கு எப்படித் தெரியும்... என்று நீங்கள் கேட்கலாம்...* **(இப்பொழுது வாருங்கள்.)**

*அவர் என் இருதயத்தில் ஜீவிக்கிறார்.*

**இப்பொழுது, ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற மட்டும் சத்தமாகப் (பாடுங்கள்).**

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், கிறிஸ்து இயேசு இன்றும் ஜீவிக்கிறார்!*

*ஜீவியத்தின் இடுக்கமான பதைகளினூடாக அவர் என்னோடு நடந்து கொண்டே பேசுகிறார்.*

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், இரட்சிப்பை அருளுகிறார்!*

*எனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம்...* **(இப்பொழுது உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள்.)**

*அவர் என் இருதயத்தில் ஜீவிக்கிறார்.*

**9. உங்கள் அருகில் உட்கார்ந்து கொண்டிருக்கும் யாரோ ஒருவருடன் கரங்களை குலுக்கி, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுங்கள். நீங்கள் எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருக்கி றீர்கள். நீங்கள் சக பிரஜைகளாயிருக்கிறீர்கள். ஓ, என்னே. அது உங்களை நலமாக உணரச்செய்யவில்லையா? கடந்த காலம்**



கொண்டிருப்பேன். அவர் காலையில் வரப்போகின்றார் என்று நான் நம்புகிறேன் என்றாலும், நான் வெளியே சென்று என் காரை விற்கமாட்டேன், இதை, அதை அல்லது மற்றதை நான் செய்யமாட்டேன். நான் சாதார ணமாக இருக்கின்றது போல அப்படியே நான் சென்று கொண்டிருப்பேன். ஏனெனில் அவர் வருவார் என்று ஒவ்வொரு கணநேரமும் நான் காத்திருக்கிறேன். ஏனெ னில் அவர் உங்களுக்காக மாத்திரமே வரலாம், இன்றிரவு உங்களுடைய மணி நேரமாக இருக்கலாம். ஒருக்கால் இன்றிரவு என்னுடைய மணி நேரமாக இருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனால் அவைகளில் ஒன்று நம்முடைய மணி நேரமாக இருக்கப் போகின்றது.

136. நான் இங்கே ஜீவித்துக் கொண்டிருந்தாலோ அல்லது அங்கே வெளியே நான் அடக்கம் பண்ணப் பட்டிருந்தாலும் கூட அது எந்தவித வித்தியாசத்தையும் உண்டாக்குமா? ஏற்கனவே எனக்காக மரணத்துக்கான தண்டனை செலுத்தப்பட்டாயிற்று என்றிருக்குமானால், ஜீவித்துக் கொண்டிருக்கின்ற எந்த ஒரு மனிதனுக்கு முன்னதாகவே நான் அங்கே இருப்பேன். அது சரி. "நான் இதைச் சொல்லுகிறேன்," 2 தெசலோனிக்கேயர், 5ம் அதிகாரம், கர்த்தரின் கற்பனைகளை முன்னிட்டு நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர் களுக்கு முந்திக்கொள்வதில்லை அல்லது தடை செய்வ தில்லை. ஏனெனில் தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்", மரித்தவர்கள், சிலாக்கியம் பெற்றவர் கள் முதலில் வருவார்கள். அதன் மூலமாகத்தான் அக்காரியமானது அருகில் இருக்கிறது என்பதை நாம்

ஒழுங்குபடுத்திக் கொண்டும், எல்லாவற்யைும் ஆயத்த மாக்கிக் கொண்டும், எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டும், ஆத்தமாய் இருக்க வேண்டும்; ஏனென்றால் அது ஒரு கண்ணிமைப்பொழுதில் இருக்கும். கண்ணிமைப் பதற்கு உங்களுடைய கண் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளுகிறது என்பதை சற்று முயற்சித்துப் பாருங்கள். அவ்வளவு சடுதியாக சபையின் எடுத்துக் கொள்ளப்படுதல் சம்பவிக்கும்.

## திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல், அக்டோபர் 12, 1958, பத்தி எண் 8, 9

நித்திரையடைந்தவர்கள் முதலாவதாக எழுந்திருப்பார் கள். அவர்கள் முதலில் சென்ற சிலாக்கியம் பெற்றவர்கள். அவர்கள் முதலில் வருவார்கள். பாருங்கள் கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந் தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அப்பொழுது நமக்கு அருமையானவர்களை நம் கண்கள் காணும். பின்பு நாம் ஒரு நிமிஷத்தில் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகி, அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படு வோம். பாருங்கள், முதலில் சென்றவர்கள் உயிரோடிருப் பவர்களைக் காட்டிலும் சிலாக்கியம் பெற்றவர்கள்.

## நான் எப்படி ஜெயங்கொள்வது? ஆகஸ்டு 25, 1963, பத்தி எண் 22

135. காலையில் அவர் வரப்போகிறார் என்று நான் எண்ணினாலும், இன்றிரவு இப்பொழுது நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் இதே செய்தியை நான் பிரசங்கித்துக்



எல்லாம் மறக்கப்பட்டு போயிற்று, அதெல்லாம் முடிந்து விட்டது. அதைச் செய்தது யார்? அவர் ஜீவிக்கிறார், அவரே அதைச் செய்தார். யார் செய்தது? கிறிஸ்துவே. இப்பொழுது, நாம் இதை மீண்டும் நம்முடைய உச்ச குரலில் பாடுவோம்.

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், கிறிஸ்து இயேசு இன்றும் ஜீவிக்கிறார்!* (எல்லா பயமும் போய் விட்டது!)

*ஜீவியத்தின் இடுக்கமான பதைகளினூடாக அவர் என்னோடு ... என்னோடு பேசுகிறார்.*

*அவர் ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறார், இரட்சிப்பை அருளுகிறார்!*

*எனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம்...* (இப்பொழுது உற்சாகத்தோடு.)

*அவர் என் இருதயத்தில் ஜீவிக்கிறார்.*

**10.** ஓ, என்னே. அது அற்புதம் அல்லவா? எப்படியேனும், வேறொரு தடவை, அது அப்படியே இந்தக் காலையில் எனக்கு ஒரு விசேஷமான சத்தமாக இருக்கிறது. உங்களுடைய சத்தங்க ளெல்லால் ஒன்றாகக் கலந்துள்ளன, சத்தங்கள் முகவும் அருமை யாக உள்ளன. நீங்கள் அதைக் கவனித்தீர்களா? அது உண்மையாகவே உங்களுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்தே வருகிறது என்பது போல் தோன்றுகிறது.

கடந்த காலத்தின் கவலைகள் இப்பொழுது போய் விட்டன. உயிர்த்தெழுதலானது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார், அவர் ஜீவிக்கிறார், நான் அவரோடு ஜீவிக்கிறேன். ஆமென். அவர் நமக்குத் தோன்றி, வழியெல்லாம் நம்மோடு பேசுகிறார்; தரிசனங்களையும், கடந்து போன காரியங்களையும், வரப்போகிற காரியங்களையும் நமக்குக் காண்பிக்கிறார். அவர் நம்முடைய வியாதிகளை சுகப் படுத்தி, நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறார். அவர் நமக்கு

சமாதானத்தைத் தருகிறார். மரணமானது முகத்தை நோக்கி உற்றுப்பார்க்கும் போது, நாம், "எந்த பொல்லாப்புக்கும் பயப்ப டேன், தேவரீர் என்னோடே இருக்கிறீர்" என்று உரத்த சத்த மிடுகிறோம். நான் அதை எவ்வளவாய் நேசிக்கிறேன்! "ஓ, மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? நான் ஜெயத்தின் மேல் ஜெயமெடுக்கப் போகிறேன்." மரணம் ஜெயமாயிருக்கிறதா? முற்றிலுமாக, மரணம் ஒரு ஜெயமாயுள்ளது. ஆமென். இப்பொழுது, மரணம் ஒரு ஜெயமே, அது ஒரு துயரமல்ல. அது, நல்லது, அது ஒரு ஜெயமாக உள்ளது. ஆமென். நான்...

பவுல், "அந்தக் காரியங்களைப் பின்னால் தள்ளிவிட்டு, பரம அழைப்பின் இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்றான். ஆமென். அவர்கள் அவனுடைய தலையை வெட்டும்படி ரோமா புரியில் தயாராயிருந்த போது, அவன் "நான் நல்ல போராட்டத் தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அவருடைய பிரசன்னமாகுதலிலே அதை எனக்குத் தந்தருளு வார்: எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று கூறினான்.

**11.** அவர் இன்று வருவதைக் காண நீங்கள் விரும்புகி றீர்களா? (சபையார், "ஆம்" என்று கூறுகின்றனர் – ஆசிரியர்.) நீங்கள் அவரைக் காண விரும்புவீர்களா? நாம் அவரை சமாதா னத்தோடே சந்திக்கும் போது – சற்று சிந்தித்துப் பாருங்கள், இந்தப் பழைய அற்பமான சரீரங்களோடு அங்கே நின்று கொண் டிருப்போம். ஒருக்கால்... அவர்கள் ஒருக்கால் வாலிபமாகவும், வாலிப வயதினராகவும் இருக்கலாம், ஆனால் அவர்கள் வயது சென்றவர்களாக ஆகப்போகிறார்கள். நரை மயிர்களும்... பல்லும் போய் விடும், கண்பார்வை மங்கிப்போய் விடும், தோள்கள் தொங்கி விடும். ஆனால் இங்கே இந்தத் திரைக்கப்பால், அங்கே ஒரு புத்தம் புதிய மனிதன் நிற்கிறான். இந்த பூமிக்குரிய கூடாரம்



அதை வேத வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டும் இருக்கின்றனர்.

## மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?, ஜூலை 25, 1965, பத்தி எண் 41

வழக்கமாக இன்றைக்கு உலகத்தில், ஜனங்கள் கர்த்த ருடைய பிரசன்னமாகுதலை ஒரு பயங்கரமான, திகில் உண்டாக்குகிற காரியமாக எண்ணுகிறார்கள். "ஓ, உலகமா னது நிச்சயமாக அதற்கு வந்தாக வேண்டும்... அதைக் குறித்து என்னிடம் பேசாதீர்கள்" என்று அவர்கள் கூறு வார்கள். அந்தக் காரியங்களைக் குறித்து அறிந்து கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. அவைகளைக் குறித்து அவர் களுக்கு அக்கறையில்லை, அவர்கள் இன்றைய தினத்திற் குரிய ஜீவனத்துக்காகவே இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரை நேசிக்கிறவர்கள் அவருடைய பிரசன்னமாகு தலை விரும்புவார்கள். கடந்து போன உங்கள் அன்பார்ந் தவர்களில் ஒருவரோ, வயதானவர்களாகிய உங்களில் யார் ஒருவரோ, உங்களுடைய தாயாரோ அல்லது தகப்பனாரோ அல்லது உங்கள் குழந்தையோ, அவர்கள் அநேக வருடங் களாக உங்களை விட்டு தூரமாய் இருந்து, அவர்கள் நிச்சயமாக எந்த நேரமும் வருவார்கள் என்று நீங்கள் அறிந்திருந்தால், ஏன், நீங்கள் வீட்டை முழுவதுமாக சுத்தப்படுத்தி வைத்திருப்பீர்கள். நீங்கள் ஆயத்தமாகி, திரும்பி வரும் ஒவ்வொரு காரின் வெளிச்சத்திற்காகவும் அந்த சாலையைக் கவனித்துக் கொண்டிருப்பீர்கள்; அது அவர்களாக இருக்குமோ என்று நினைக்கிறீர்கள்.

இப்பொழுது, அந்தவிதமாகத்தான் சபையானது கர்த்த ருடைய வருகைக்காக விழிப்புடன் இருக்க வேண்டும்: அவர் வந்த உடனே போவதற்காக எல்லாவற்யையும்

# விழிப்போடு ஆயத்தமாயிருத்தல்

# Ready and Watching

*இதைக் குறித்து சகோ. பிரன்ஹாம் கூறுவதை இங்கு வாசிக்கலாம்:*

நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்ய வேண்டும். காத்திருக்க மட்டும் செய்யுங்கள்; உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி வைத்திருங்கள், அதை எண்ணெயினால் முழுவதும் நிரப்புங்கள். ஒவ்வொரு மணி நேரமும் ஜெபித்துக் கொண்டிருங்கள், ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணி நேரமும். உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள்; ஆயத்தமாயிருங்கள்; இனிமையாயிருங்கள், விழித்துக் காத்திருங்கள்...

**கேள்விகளும் பதில்களும்** (COD 2:19), **ஆகஸ்ட் 23, 1964 காலை, பத்தி எண் 198**

ஜனங்கள் அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றனர். இறுக்கத்தை நம்மால் உணர முடிகின்றது. அவர்கள் தேடிக்கொண்டும், ஒவ்வொரு அசைவையும் அடையாளத்தையும் கவனித்துக்கொண்டும்,



அழிந்து போகும் போது, நாம் அவ்விதமான புதிய சரீரத்திற்குள் நுழைந்து விடுவோம். (சகோதரன் பிரன்ஹாம் தம்முடைய விரல்களைச் சொடுக்குகிறார் – ஆசிரியர்.) நிச்சயமாக. அவர் ஜீவிக்கிறார்; நாமும் கூட ஜீவிக்கிறோம். நாம் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையில் ஜீவிக்கிறோம்.

அவர் இக்காலையில் நம்முடைய முகங்களைத் திருப்பி, அந்தத் திரையை இழுத்து, நமக்குக் காண்பித்தால், அப்போது அதற்கு மேலும் விசுவாசம் இருக்காது. நாம் இப்பொழுது வெறுமனே அதை விசுவாசிக்கிறோம். வேறொரு உலகத்திலிருந்து மகிமையின் எதிரொலிகள் நம்முடைய ஆத்துமாவுக்குள் அசைந்து வந்து, "அது உண்மை! அது உண்மை! பரம அழைப்பின் இலக்கை நோக்கித் தொடர்ந்து செல்!" என்று சுட்டிக்காட்டுவதை நாம் உணர்ந்து கொள்கிறோம். என்னவொரு அற்புதமான நேரம்! ஆமென். ஓ, அவர் மிகவும் தத்ரூபமாய் இருக்கிறார்!

**12.** இப்பொழுது, சபையாரே, இது ஏறக்குறைய ஆராதனை முடிகிற நேரம். நீங்கள் உங்களுடைய காலை உணவைப் புசித்து விட்டு, ஆராதனையைத் தொடருவதற்காக திரும்பி வர வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். நான் இன்று அதனுடைய ஓரத்தைத் தொட்டிருக்கிறேன், நான்... உயிர்த்தெழுதலை தொட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் காலையில், ஏறக்குறைய இரண்டு மணி நேரம் இருந்திருக்கிறோம்; நான் இப்பொழுது வீட்டிற்குச் சென்று ஜெபம் செய்வதற்காக என்னை நானே அடைத்துக் கொள்ள விரும்புகிறேன், தேவன் இன்று ஒரு அசலான, அசலான ஜெப வரிசையை நமக்குத் தர வேண்டும் என்று நான் – நான் ஜெபிக்கிறேன். அதன்பிறகு சிறிது கழிந்து இப்பொழுதிலிருந்து ஏறக்குறைய இரண்டு மணி நேரம் மேலேறிச் செல்லுதல் (ascension) என்பதன் பேரில் நான் பிரசங்கிக்க விரும்புகிறேன். அவர் மேலேறிச் சென்ற போது, அவர் என்ன செய்தார் என்பதன் பேரில் பிரசங்கிக்க விரும்புகிறேன். அவர் அந்தக் கிரயத்தோடு இங்கே என்ன செய்தார் என்று நாம் காண்கிறோம், அவர் மேலேறிச் சென்ற போது, அவர் என்ன

செய்தார் என்பதையும், தேவன் அவரைக் கொண்டு என்ன செய்தார் என்பதையும், அவர் இன்று என்னவாயிருக்கிறார் என்பதையும் காண நாம் இப்பொழுது விரும்புகிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது. யாவரும் உயிர்த்தெழுதலை உணருகிறீர்களா? நீங்கள் உங்களுடைய இருதயத்தில் உயிர்த்தெழுதலை உணருகிறீர்களா?

சரி. நாம் ஜெபத்திற்காக நம்முடைய தலைகளைத் தாழ்த்துவோம். சகோதரன் நெவில் அவர்களே, நாம் நம்முடைய தலைகளை வணங்குகையில், நீர் விரும்பினால், ஒரு ஜெபம் செய்து நீர் எங்களை அனுப்புவீரா என்று நான் வியப்படைகிறேன். சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.

இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்க:
சகோ. A. டேவிட் லாரன்ஸ்: +91 9488089819
website: www.thefinish.in



பரிசுத்தப்படுத்தும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

ஒருமிக்கக் கொண்டுவரப்பட்டிருக்கும் திராட்சைப் பழத்தின் ஜீவனிலிருந்து செய்யப்பட்ட இந்தத் திராட்சை ரசத்தை என்னுடைய கரத்தில் பிடித்திருக்கும் நேரத்தில். நான் அங்கே நோக்கிப்பார்த்து என் பாவமானது போனதைக் காணாமல், நான் இராப்போஜன தட்டிலிருந்து எடுக்கும் படியான ஒரு நேரம் ஒருபோதுமே இருக்காது. அது எவ்வாறு – எவ்வாறு இருந்து வந்துள்ளது என்பதை நான் காண்பேனானால், நல்லது, நாம் எங்கேயிருப்போம்?

ஒரு வியாதிப்பட்ட மனிதன் படுத்த படுக்கை யாயிருந்து அங்கே அந்த மருத்துவமனையில் மரித்துக் கொண்டிருக்கும் இடத்தைக் குறித்து நான் எண்ணிப் பார்க்கிறேன்: அது நானாகவும் இருக்கலாம். அப்போது அவருடைய தழும்புகளால் நான் குணமானேன் என்பதன் மூலமாக அது இருக்கும். இந்த திராட்சை இரசத்தை உபயோகப்படுத்தும் நோக்கத்திற்காக பரலோகத்தின் தேவன் தாமே இந்த திராட்சை ரசத்தை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் இந்த திராட்சை ரசத்தை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பிரதிநிதித் துவப்படுத்துகிற திராட்சைகளின் இரத்தத்திலிருந்து எடுக்கப் பட்ட இந்த திராட்சை ரசத்தை உம்மிடம் கொடுக்கிறோம். பிதாவே, நாங்கள் அதைப் பெற்றுக் கொள்ளும்போது, வியாதி எங்களை விட்டு நீங்கிப் போவதாக. பாவ ஆசை எங்களை விட்டு எடுக்கப்பட்டு போவதாக. இதற்குப் பிறகு, நாங்கள் அவ்வளவு பரிசுத்தமான, அர்ப்பணிக் கப்பட்ட ஜீவியம் செய்வோமாக, அந்த மனிதர்கள் இயேசு கிறிஸ்துவின் பிரதிபலிப்பை எங்களுக்குள் காண்பார்களாக. எங்களுடைய – எங்களுடைய ஜீவிய நடை நாங்கள் விசுவாசிக்கிற சுவிசேஷத்திற்கு தகுதியானதாய் இருப்பதாக. இதை அருளும், பிதாவே. இப்பொழுது இந்த திராட்சை ரசத்தை உபயோகப்படுத்தும் நோக்கத்துக்காக இதை

# இராப்போஜனம்

# COMMUNION

63-0707 E

(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# இராப்போஜனம்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1963–ம் வருடம், ஜூலை மாதம், 7–ம் தேதி பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்காவில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப் படுகின்றது.

வெளியிடப்பட்டது: மார்ச் 2017



உம்மைக் குறித்து நினைவுகூரும்படியாக எங்களால் இதைச் செய்ய முடிகிறது. நாங்கள் எங்கள் சொந்த இருதயங்களில் சிந்தித்துப் பார்க்கும் போது, ஒரு நாள் நாங்கள் தகுதி யற்றவர்களாய் இருந்தோம், இப்பொழுதோ இயேசு கிறிஸ் துவின் இரத்தமானது அந்த பாவத்திலிருந்து எங்களைச் சுத்திகரித்து, நாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங் களில் ஒன்றாக நிற்கிறோம்.

பிதாவே, இந்த கோஷர் அப்பமானது சுடப்பட்டு, இந்த நோக்கத்துக்காகவே இங்கே கொண்டு வரப்பட்டுள் ளது, கர்த்தாவே, பிட்கப்பட்ட சரீரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற அதை நீர் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்று நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்... (ஒலிநாடாவில் காலியிடம் – ஆசிரியர்.) இச்சரீரமானது பிட்கப்பட்டபோது, அவர் கல்வாரியில் புனிதத்தன்மையுள்ள அச்சரீரத்தில் வேதனையையும் பாடுகளையும் அனுபவித்தார். எங்களு டைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, எங்களு டைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். எங்களுக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமா னோம். அதன் காரணமாகத்தான் இந்த பிட்கப்பட்ட அப்பத்தை இன்றிரவு நாங்கள் புசிக்கிறோம். தேவனே விசுவாசிப்பவர்களை ஆசீர்வதித்து, இயேசு கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற இந்த – இந்த கோஷர் அப்பத்தை பரிசுத்தப்படுத்தும். ஆமென்.

*14.* “போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, அவர் எடுத்து, வாங்கி புசியுங் கள்; இந்தப் பாத்திரம் புது உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்” என்று வேதம் கூறுகிறது. இன்றிரவு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படிக்கு இங்கே

நடத்துவார். (அங்கே வேறொரு அமைதியான வேளை காணப்படுகிறது – ஆசிரியர்.)

*12.* அப்பமானது கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. சற்று முன்பு பாடின, "என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது" என்ற பாடலைப்போன்று. கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற மூன்று ஒழுங்குகள் மாத்திரமே உண்டு, அவைகள் எவை யெனில், ஞானஸ்நானம், அப்பம் புசித்து திராட்சை ரசம் (wine) பானம் பண்ணுதல், மற்றும் கால் கழுவுதல் ஆகியவைகளாகும்; அவைகள் தான் ஒழுங்குகள் ஆகும்.

இது உடைக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறது. இன்றிரவு இதில் பங்கு கொள்ளு கிற ஒவ்வொரு நபரும் தங்கள் மேல் வருகிற பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது. வியாதியஸ்தர்களா யிருப்பவர்களை, கசப்பான கீரைகளையும், திராட்சை ரசத்தையும் புசித்ததன் மூலமாக எகிப்தில் முதலில் இதைத் துவங்கின பரலோகத்தின் தேவன் தாமே... தேவன் உங்களை சுகப்படுத்தி, உங்களுடைய முழு பிரயா ணத்திலும் உங்கள் மத்தியில் வியாதியே இல்லாதவாறு செய்வார் என்று நம்புகிறேன். நாம் இதை அவருக்கு விரும்பிக் கொடுக்கும்போது, பரலோகத்தின் தேவன் தாமே இப்பொழுது நம்மேல் நோக்கமாயிருப்பாராக.

*13.* கர்த்தராகிய தேவனே, வானங்களையும் பூமியை யும் உண்டாக்கினவரே, நித்திய ஜீவனின் ஆக்கியோனே, ஒவ்வொரு நல்ல ஈவையும் அருளுபவரே, இந்த ஒழுங்குக் காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், நாங்கள் ஐக்கியத்தைக் கொண்டவர்களாய், தேவனுடைய கிருபை யின் இராப்போஜனத்தைச் சுற்றிலும் உம்முடைய பிரசன் னத்தில் இருந்து, அது அக்காலத்தில் இருந்தது போன்றே

# இராப்போஜனம்

# (COMMUNION)

## ஞாயிறு மாலை, ஜீலை 7, 1963
## பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

சகோதரன் ஆர்மன், உங்களுக்கு நன்றி. இன்றிரவு நம்முடைய சகோதரனுடைய உதடுகளிலிருந்து புறப்பட்ட இந்த அற்புதமான செய்தியை கேட்கும்படியாக இங்கே இருந்ததற்காக நாம் சந்தோஷமாயிருக்கிறோம், ஏற்கனவே கூறினபடி, உற்சாகப்படுத்தும்படியான இந்த மகத்தான செய்தியை நம்மிடம் கொண்டு வருவதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இருந்திருக்க வேண்டுமென்று நாம் நம்புகிறோம். நாம் இன்றைய நாளில் தேவனுக்கு முன்பா கவும் ஒருவர் மற்றவருக்கு முன்பாகவும் எவ்வளவு பரிசுத்த மாக ஜீவிக்க வேண்டும்! இந்த மகத்தான தேவனுடைய அழைப்பைக் குறித்து நாம் உரிமை பாராட்டுகிற நேரத்தில், நாம்-நாம்-நாம் நம் எல்லாருடைய மத்தியிலும் எந்த அசுத்தமான தொடர்புகளும் இருப்பதாக நம்மிடையே கேள்விப்படவே இல்லாதபடி பரிசுத்தமாக இருக்கவே விரும்புகிறோம். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற இந்தக் காரியத்தைக் குறித்து நாம் தகுதியானவர்களாய் நடக்க வேண்டும். நாம் இப்பொழுது பிரயாணத்தின் முடிவை

நோக்கிய பாதையில் இருக்கிறோம், அங்கே நாம் செய்வ தற்கும் நினைப்பதற்கும் எல்லாவற்றிற்கும் மிகவும் அதிக மாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் எப்போதும் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டு மென்று விரும்புகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங் கள். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய ஜீவியத்தைக் கவனித்துப் பாருங்கள்: உங்களுடைய ஜீவியமானது தேவ னுடைய பரிசுத்தத்தோடு சரியாயில்லையென்றால், திரும்பிச் சென்று மீண்டும் ஜெபிக்கத் தொடங்குங்கள்; அங்கே ஏதோ வொன்று தவறாயுள்ளது. புரிகிறதா? ஆவியின் கனிகள் தாமே உங்களினூடாக அறியச் செய்யும் விதமான ஒரு நிலையில் நாம் ஜீவித்தாக வேண்டும். அந்தவிதமாகத்தான் நாம் ஜீவிக்க விரும்புகிறோம்.

உங்களுக்குத் தெரியும், திறமையோடு பிரசங்கம் பண்ணக்கூடிய மகத்தான பிரசங்கிமார்களைக் குறித்து நாம் சிலசமயம் கேள்விப்படுகிறோம், ஆனால் நாம் ஒருவர் பிரசங்கம் பண்ணுவதைக் கேட்பதைக் காட்டிலும், பிரசங் கத்தின்படி ஜீவிப்பதை காண்பதையே நாம் அதிகமாய் விரும்புகிறோம் (பாருங்கள்?) ஏனெனில் தேவன் உள்ளே இருக்கிறார் என்பதற்கு அதுதான் அத்தாட்சியாகும்.

2. இப்பொழுது, நாம் இராப்போஜன பந்திக்கு வந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது, இன்னும்கூட இராப் போஜனம் எடுக்காத யாராவது ஒருவர் இங்கிருப்பார் களானால், நீங்கள் அதை ஒருக்கால் அதை உங்களுடைய சொந்த சபைகளில் எடுக்கலாம், ஆனால் இன்றிரவு உங்க ளால் இராப்போஜனம் எடுக்கக் முடிந்து, இந்தக் காரியங் களைச் சுற்றிலும் எங்களோடு ஐக்கியங்கொள்ள விரும்பி னால், நாங்கள் மகிழ்ச்சியாயிருப்போம். நீங்கள் - நீங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, அதன் ஒரு பாகமாயிருக்கிறீர்கள் என்று அறிக்கை பண்ணுகிற அந்த சுவிசேஷத்திற்கு தகுதி



இடத்தில், நாம் சுயநலத்திலிருந்து நம்மை நாமே சுத்தமாகக் காத்துக் கொள்ள விரும்புகிறோம்; நம்முடைய காரியங்களை பாவத்திலிருந்தும், நம்முடைய ஜீவியங்களை உலகத்தின் சகல காரியங்களிலிருந்தும் சுத்தமாகக் காத்துக் கொள்வோம், நாம் அதனால் கறைபட்டு விடக்கூடாது. நாம் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக ஆயத்தமாயிருக்க வாஞ்சிக்கிறோம். எனவே இப்பொழுது, சிறிது நேரம் ஒருவர் மற்றவருக்காக அமைதியாக ஜெபிப்போமாக. நான் உங்களுக்காக ஜெபிக்கையில் நீங்கள் எனக்காக ஜெபியுங் கள். (சகோதரன் பிரன்ஹாம் ஜெபிப்பதைத் தொடர்ந்து 31 வினாடிகள் அமைதி நிலவுகிறது — ஆசிரியர்.)

கர்த்தராகிய இயேசுவே, கர்த்தாவே, இப்பொழுது எங்களுடைய சகல பாவங்களும் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினுள் இருப்பதாக. அவை தேவனுடைய ஞாபகத் திலிருந்து மறக்கப்பட்டு போவதாக, நாங்கள் இப்பொழுது அன்பிற்குரிய விசுவாசிகளாகவும், கிறிஸ்துவில் குழந்தை களாகவும் கூடி வருவோமாக. நாங்கள் இதை அவருடைய நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

11. இப்பொழுது, இச்சமயத்தில், மூப்பர்கள் முன்னே வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அது இங்கே இன்னு மாக நடைமுறையாக இருக்கிறதா? சகோதரன் டோனி சேபல் அதை நடத்துவார். இப்பொழுது யாராவது போக வேண்டியிருந்து, இராப்போஜனத்திற்காக தங்கியிருக்க விரும்பவில்லை என்றால், நாங்கள் இன்றிரவு உங்களை உள்ளே கொண்டிருப்பதில் (நீங்கள் வெளியே போவதில்) மகிழ்ச்சியாயிருக்கிறோம். புதன்கிழமை இருக்கிற கூடுகையை - புதன் கிழமை இரவு ஜெபக் கூட்டத்தை நினைவுகூருங்கள். மற்றவர்கள் பீடத்தண்டை வரும் வேளையில், நீங்கள் அமைதியாக வெளியேறி விடுங்கள். நாம் இராப்போஜனத்திற்காக ஆயத்தமாகும் வேளையில், இங்கிருக்கும் சகோதரன் சேபல் ஜனங்களை பீடத்தண்டை

அதைக் குறித்து எதையுமே அறிந்திருக்கக்கூட மாட்டீர்கள், அறியப்படாத ஒரு பாவம். தேவனே அவைகளை மன்னியும் என்று நாம் – நாம் – நாம் ஜெபிப்போம்.

இப்பொழுது, அது, “நீங்கள் கூடி வரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள் (*tarry*)” என்று கூறுகிறது, அது உண்மையாகவே இவ்விதமாக ஒருவருக்காக ஒருவர் காலதாமதம் செய்யுங்கள் என்று கூறுகிறது. “காலதாமதம் செய்தல் (*tarry*)” என்பதற்கு “காத்திருத்தல்” என்று அர்த்தம், ஒருவருக்காக ஒருவர் காத்திருத்தல். நாம் இப்பொழுது அதை செய்வோம். நான் உங்களுக்காக ஜெபிப்பேன். நீங்கள் தவறு செய்திருக்கிறீர்கள் என்று நீங்கள் எதையாவது அறிந்திருந்தால், “தேவனே, என்னை மன்னியும். நான் அதைச் செய்ய விரும்பவில்லை. இந்த இரவிலிருந்து நீர் எனக்கு உதவி செய்வீரென்றால், நான் அதை மீண்டும் செய்ய மாட்டேன். கர்த்தாவே, நான் – நான் அதையே பொருட்படுத்திக் கூறுகிறேன், நீர் என்னை மன்னிப்பீரென்றால், நான் அதை மீண்டும் செய்ய மாட்டேன். ‘நீர் என்னை மன்னித்திருக்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன்’ என்ற அறிக்கையின் பேரில், நான் கிறிஸ்துவின் சரீரத்தை புசிக்கப் போகிறேன், என்னுடைய சகல பாவங்களுக்காகவும் நீர் என்னை மன்னித்து விட்டீர் என்று என் இருதயத்தில் உணருகிறேன்” என்று கூறுங்கள். பிறகு உங்களுடைய இரகசிய பாவத்துக்காக ஜெபம் பண்ணுங்கள்; எனக்காக ஜெபம் பண்ணுங்கள், அது ஒருக்கால் நாம் அறிந்திராத எதுவாகவும் இருக்கலாம், (அப்போது) உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும்படிக்கு நாம் ஒன்றாகக் கூடி வர மாட்டோம்.

*10.* நாம் இங்கே உள்ளே உலகம் இருப்பதை விரும்பவில்லை. இங்கே ஆராதிக்கும்படிக்கு தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜனங்களைக் கொண்ட இந்த



யானவர்களாய் நீங்கள் நடக்கிற காலம் வரை நாங்கள் உங்களுக்கு ஒருபோதும் எந்த கோட்டையும் வரைய மாட்டோம்.

நீங்கள் இந்த சுவிசேஷத்தின் பாகமாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும். நாம் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோமோ அதனுடைய எழுதப்பட்ட நிருபமாய் நீங்கள் - நீங்கள் இருக்கிறீர்கள். நாம் நிந்தைக்குரிய ஏதோவொன்றை செய்கிற காலம் வரை நாம் அதற்கு செவிகொடுக்க கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். புரிகிறதா? நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதன்படி ஜீவித்தாக வேண்டும். நாம் செய்கிற எல்லா காரியங்களிலும், நாம் பேசுகிற எல்லா காரியங்களிலும் இயேசு கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டுமே தவிர, அது ஒருபோதும் தூஷிக்கப்படாத விதமாக அப்படிப்பட்ட ஒரு ஜீவியம் செய்யுங்கள். அது அந்தவிதமாகத்தான் இருக்கிறது. நாம் இதற்காக அவரை நேசிக்கிறோம்.

*3.* இப்பொழுது, இன்றிரவு நாம் *2* கொரிந்தியர் *11*ம் அதிகாரத்தில் காணப்படும் கர்த்தருடைய போஜன பந்தியின் ஒழுங்கை வாசிக்கப் போகிறோம். நாம் இதை வாசிப்போம், ஒவ்வொரு தனிப்பட்ட நபரும்... நாம் இதை எவ்வாறு செய்கிறோம், புதிதாக வந்திருப்பவர்கள் நம் மத்தியில் இருப்பார்களானால், ஜனங்கள் ஒருவர்பின் ஒருவராக உள்ளே வரும் வேளையில், நாம் அவர்களைப் பீடத்தைச் சுற்றிலும் அழைக்கிறோம், அப்போது அவர்கள் இராப்போஜனம் எடுக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதற்குத் தகுதியானவனாயிருக்கிறான்.

இப்பொழுது, நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கும் ஒரு ஜீவியத்தை நீங்கள் ஜீவிப்பீர்களானால்... நீங்கள் உங்களுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்க விரும்புகிறீர்கள். நல்லது, நான் நிச்சயமாக இதைச்

சுருக்கமாகக் குறிப்பிடுவேனாக, நாம் அபாத்திரமாய் இராப்போஜனம் எடுப்போமானால், என்ன சம்பவிக்கும் என்பதைக் குறித்து நாம் இங்கே வேதவாக்கியத்தில் வாசிக்கிறோம். இப்பொழுது, நம்மில்நாமே நாம் பாத்திரமானவர்கள் அல்ல என்பது நமக்குத் தெரியும்; நம்மில் யாருமே பாத்திரமானவர்கள் அல்ல. ஆனால் நாம் நம்முடைய சொந்த தகுதியில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை, நாம் அவரையே நம்பியிருக்கிறோம்... நாம் - நாம் அவருடைய தகுதியில்தான் நம்பிக்கை கொண்டிருக்கிறோம், நாம் நம்முடைய சொந்த எண்ணங்களுக்கு மரித்து, அவருடைய சிந்தனைகளையே நாம் சிந்தித்து, நாம் செய்ய வேண்டுமென்று அவர் நம்மிடம் கட்டளையிட்டிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கும் யாவற்றிற்கும் தக்கதாக ஜீவித்து, திரும்பிப் பார்த்து நாம் எவ்வாறு ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்த்து, நம்முடைய ஜீவியத்தைக் கவனிக்கிறோம். நாம் சுவிசேஷத்திற்குத் தகுதியில்லாத காரியங்களை செய்கிறவர்களாக இருந்தால், நாம் இராப்போஜனம் எடுக்கக்கூடாது.

4. ஆனால் எல்லா மனிதராலும் வாசிக்கப்படக்கூடிய விதத்தில் நம்முடைய ஜீவியங்கள் இருக்கின்றன என்று நாம் நினைக்கிறபடியான காரியங்களை நாம் செய்து கொண்டிருப்போமானால், யாராவது ஒருவர் விரலை நீட்டி, “நான் இம்மனிதனை அன்றொரு நாள் ஒரு மதுக்கடையில் பார்த்தேன்” என்றோ, “இம்மனிதன் நின்றுகொண்டு, அசுத்தமான நகைச்சுவைகளைக் கூறிக்கொண்டிருந்ததை நான் நான் கேட்டேன்” என்றோ, “இந்த ஸ்திரீ தவறான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறாள்” என்றோ கூற முடியாமல் இருக்குமானால். (ஆனால் நீங்கள் தவறான காரியங்களைச் செய்து) பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் சுட்டிக்காட்டுவதை நீங்கள் அறிவீர்களானால், அப்பொழுது – அப்பொழுது நீங்கள் இராப்போஜனம் எடுக்கக்கூடாது. ஆனால்



லும் இருந்து கொண்டு, உங்களால் அதை நிதானித்து அறிய முடியாது; நாம் அதற்கும் மேலாக வந்தாக வேண்டும். கர்த்தர் நீதிபரர் என்று நாம் நிதானித்து அறிந்து, அவர் நம்முடைய கிருபாதார பலியாயிருக்கிறார் என்று நாம் நிதானித்து அறிகிறோம்; நாம் அறிக்கை செய்துள்ள நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும், நம்முடைய எல்லா அக்கிரமங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிப்பதற்கு அவருடைய பரிகாரத்தின் மேல் நாம் காத்திருந்து, அவரிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கிறோம்; அப்போது கர்த்தருடைய சரீரம் இன்னதென்றும், அது எதற்காக இருக்கிறது என்றும் நாம் நிதானித்து அறிகிறோம்.

அப்போது கர்த்தருடைய மணவாட்டி சரீரமாக அது நம் மத்தியில் இருப்பதை மீண்டுமாக நிதானித்து அறிகிறோம், சுவிசேஷம் வளரவோ அல்லது தேவனுக்கு முன்பாக நம்மை ஒரு கற்புள்ள கன்னிகையாக கொடுப்பதற்கு தடையாயிருக்கிற ஏதோவொரு தவறு இங்கே நம்மிடத்தில் இருக்குமானால், நாம் அதை நிதானித்து அறிவோம்; அது தவறு தானா என்று சரியாக இப்பொழுதே கண்டு கொள்ளும்படியாக நாம் நிதானித்து அறிவோம். அது தவறாக இருக்குமானால், அதை அறிக்கை செய்வோம். “கர்த்தாவே, அதைக் குறித்து நான் – நான் வருந்துகிறேன்” என்று கூறுவோம்.

9. ஆகையால், அது நிச்சயமாக நாம் செய்திருக்கிற, நீங்கள் செய்திருக்கிற ஏதோவொன்றாக இருக்கலாம், நான் செய்திருக்கிற ஏதோவொன்றாக இருக்கலாம். அது நிச்சயமாக உணர்வோடு இருந்தாக வேண்டும், சரியாக இப்பொழுதே, தேவன் அதற்காக நம்மை மன்னிக்கும்படி கேட்போமாக. நாம் வழக்கமாக இங்கே ஒரு பாடலைப் பாடுவதுண்டு: “நான் உம்மிடம் அறிக்கையிட்டிருக்கிற பாவங்களை மன்னியும்” என்ற பாடல், இரகசியமான பாவங்களை மன்னியும், உங்களுக்குப் புரிகிறதா? நீங்கள்

**நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணு வேன்.**

7. நாம் கூடி வரும்போது, இதன் பேரிலான மகத்தான புத்திமதிகளை எப்போதுமே கூறுவதுண்டு, நாம் அப்படிப் பட்ட எதையுமே காணக்கூடாமல் இருந்தாலும், வேறு ஏதோவொருவரிடத்தில் நாம் காண்கிற சரியல்லாத ஏதோ வொரு காரியம் அங்கே இருக்கலாம். இந்த இராப்போ ஜனத்தைப் புசிக்க நீங்கள் கூடி வரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண் ணுங்கள். ஜெபம் பண்ணுங்கள்... நாம் எப்போதுமே இதைக் குறித்துக் கூறுகிறோம்: நீ — நீ உன்னிடத்தில் ஏதோவொரு பாவம் இருக்குமானால், நீ ஒரு விசுவாசியாக இருந்து கொண்டே ஏதோவொரு அநீதியான செயலையோ அல்லது ஏதோவொரு காரியத்தையோ செய்திருப்பாயா னால், நான் உனக்காக ஜெபிப்பேன், தேவன் அதை உன்னை விட்டு எடுத்துப்போடும்படியாகவும், அதற்காக உன்னை அவர் மன்னிக்கும்படியாகவும் நான் — நான் ஜெபிப்பேன். நான் அறிந்திராமல் செய்திருக்கிற ஏதோ வொரு — ஏதோவொரு காரியம் அங்கேயிருக்குமானால், நீ எனக்காக ஜெபி... நான் அதைச் செய்து, அது தவறென்று அறிந்தால், நான் — நான் சரியாக இப்பொழுதே அதை அறிக்கை செய்வேன். நான் அதை அறிக்கை செய்ய ஆயத்தமாயிருக்கிறேன், ஏனெனில் அபாத்திரமாய்ப் போஜ னபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்ன தென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.

8. நீங்கள் கர்த்தருடைய சரீரமாய் இருக்கிறீர்கள் என்பதை நிதானித்து அறிதல், துன்மார்க்கத்திலும் பாவத்தி



நீங்கள் ஜீவித்துக் கொண்டிருக்கும் ஜீவியத்தை நீங்கள் திரும்பிப் பார்த்து, உங்களுடைய எல்லா பாவங்களும் அறிக்கை செய்யப்பட்டு, இரத்தத்தின் கீழாக உள்ளது என்ப தைக் கண்டு, அவ்வாறு நீங்கள் - நீங்கள் உணருவீர் களானால், அப்பொழுது நீங்கள் - நீங்கள் இராப்போஜனம் எடுக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் - நீங்கள் - நீங்கள் அதனுடைய ஒரு பாகமாக இருக்கிறீர்கள்.

5. இப்பொழுது, இங்கே பரிசுத்த யோவான் புத்தகத்தில் இருந்து, பரிசுத்த பவுல் நமக்கு உபதேசிக்கும் படியாகவுள்ள இந்த வேதவாக்கியத்தை நாம் வாசிப்போ மாக... உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன், அது 1 கொரிந்தியர் 11-ம் அதிகாரம் 23ம் வசனம் தொடங்கி இருக்கிறது.

**நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி யிலே அப்பத்தை எடுத்து,**

எனக்குப் பேச சிறிது நேரம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும் படி இதைச் செய்யுங்கள் என்றார்.**

**போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத் திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தி னாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.**

**ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக் கிறீர்கள்.**

**இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.**

**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்.**

**என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்ன தென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கி னைத்தீர்ப்பு வரும்படி போஜனம்பண்ணுகிறான்.**

**இதினிமித்தம், உங்களில் அநேனர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்தி ரையும் அடைந்திருக்கிறார்கள்.**

**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.**

**நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக் கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.**

*6. நான் ஒரு முக்கிய விஷயத்தைக் கூறுவேனாக: நாம் கிறிஸ்துவாகிய வார்த்தையின் மூலமாக நியாயந்தீர்க் கப்படும்போது, நாம் சிட்சிக்கப்படுகிறோம். நாம் தவறு செய்து, இந்த வார்த்தையின்படி ஜீவிக்கவில்லை என்றால், நாம் கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். கர்த்தர் நம்மை*



*சிட்சிக்கும்போது, அது நம்மைத் திருத்துவதைக் குறிக் கிறது, அப்போது நாம் உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதிருக்கிறோம்.*

*நாம் உலகத்தாரல்ல. நாம் உலகத்திலிருந்து வித்தியா சப்பட்டவர்களாய் இருக்கிறோம், ஒரு வித்தியாசமான ஜீவியத்தை, ஒரு வேறுபிரிக்கப்பட்ட ஜீவியத்தை ஜீவிக்கி றோம். நாம் ஒருபோதும் உலகத்தின் ஜீவியத்தை ஜீவிக்கா மல், ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறோம். நாம் ஒரு - ஒரு நல்ல ஜீவியத்தை, ஒரு வித்தியாசமான ஜீவியத்தை ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அப்படிப்பட்ட சமூக அந்தஸ்தை நான் குறிப்பிடவில்லை, ஆனால் உண்மையான பரிசுத்த ஜீவியத்தை நாம் ஜீவிப்பதையே நான் குறிப்பிடுகி றேன், ஆவியின் கனிகள் நம்மிடத்தில் நிச்சயமாக காணப் பட வேண்டும்: சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, விசுவாசம் போன்ற ஆவியின் கனிகள் நம்மில் காணப்பட வேண்டும்.*

*ஆனால் நாம் இக்காரியங்களைக் கேள்விப்படும் போது, நாம் அவைகளைச் செய்யக் கூடாது என்றும், நாம் அவ்வாறு செய்தால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படு வோம் என்றும், நாம் கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். நாம் நமக்குள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாமலிருந்தால், தேவனு டைய கிருபையால் நாம் அக்காரியங்களுக்கு மேலாக ஜீவிக்கிறோம். அப்படியானால் நாம் உலகத்தோடு ஆக்கி னைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை, ஆனால் உலக காரியங்களுக்கு மேலாக நாம் ஜீவிக்கிறோம். புரிகிறதா?*

**ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத் திருங்கள்.**